**செ. கு. எண்**: 301 **நாள்**:23.08.2012

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 23 .8.2012

காஞ்சிபுரம் மாவட்டம், தேசிய நெடுஞ்சாலை எண் 45-ல், இராஜகுளம் கூட்டுறவு வங்கி அருகில் இன்று (23.8.2012) ஒசூரிலிருந்து சென்னை நோக்கி வந்து கொண்டிருந்த அரசு விரைவு பேருந்து, நின்று கொண்டிருந்த லாரி மீது மோதியதில், பேருந்தில் பயணம் செய்த ஒன்பது நபர்கள் உயிரிழந்தார்கள் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்தச் சாலை விபத்தில் அகால மரணமடைந்த ஒன்பது நபர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்த கோர விபத்தில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறவும், அவர்களுக்கு தேவையான உதவிகளைப் புரியவும் கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்களை உடனடியாக சம்பவ இடத்திற்கு நான் அனுப்பி வைத்துள்ளேன்.

மேலும், இச்சாலை விபத்தில் 10 நபர்கள் பலத்த காயமடைந்துள்ளனர் என்பதை அறிந்து மிகவும் வருத்தம் அடைந்தேன். காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், காஞ்சிபுரம் மாவட்ட நிருவாகத்திற்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். இவர்கள் விரைவில் பூரண குணமடைய வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தத் துயரச் சம்பவத்தில் மரணமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு 25,000/-ரூபாயும், லேசான காயமடைந்தவர்களுக்கு 10,000/- ரூபாய் வழங்கவும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**